செய்தி வெளியீடு எண்: 909 **15–10–2010**

# காணொலிக் காட்சி (Video Conferencing) வாயிலாக மின் ஆளுமைத் திட்டம் தொடக்கவிழாவில் மாண்புமிகு முதலமைச்சரின் உரை

ஏழை, எளிய, சாமானிய மக்களின் முன்னேற்றத்திற்குத் தேவையான அனைத்து வசதிகளையும் செய்து கொடுப்பதில் தமிழக அரசு மிகுந்த முனைப்புடனும், மற்ற மாநிலங்களுக்கெல்லாம் முன்னோடியாகவும் செயல்பட்டு வருவதை அறிவீர்கள்.

பெருகிவரும் கணினிப் பயன்பாடு மற்றும் தொலைத் தொடர்பு தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி இந்த அரசு பல ஆண்டுகளாக மக்களுக்குப் பல வகையிலும் தொண்டாற்றி வருகிறது.

2008 பிப்ரவரித் திங்கள் 26ஆம் நாளன்று நடைபெற்ற கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத் திறப்பு விழாவின்போது கிருஷ்ணகிரி, கோவை, திருவாரூர், அரியலூர், பெரம்பலூர் ஆகிய மாவட்டங்களில் மாவட்ட நிர்வாகம் முழுதும் கணினி மயமாக்கும் முன்னோடித் திட்டம் செயல்படுத்தப்படும் என அறிவிக்கப்பட்டது. அத்திட்டத்தை நடைமுறைப்படுத்திடும் நோக்கில், மக்களுக்கு நேரடியாகப் பல்வேறு நல உதவிகளை வழங்கும் துறைகளான பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலத்துறை, ஆதிதிராவிடர் பழங்குடியினர் நலத்துறை மற்றும் சமூகநலத் துறையைச் சார்ந்த பல சேவைகளும் இத்திட்டத்தின்கீழ் பொது மக்களுக்கு வழங்கப்பட்டு வருகின்றன.

இத்தகைய பணிகளைத் தொடர்ந்து, தற்போது வருவாய்த் துறையைச் சார்ந்த பணிகளான

- சாதிச் சான்றிதழ் வழங்குதல்,
- வருமானச் சான்றிதழ் வழங்குதல்,
- ஆதரவற்ற பெண்களுக்கான சான்றிதழ் வழங்குதல்,
- இருப்பிடச் சான்றிதழ் வழங்குதல்,
- பட்டதாரியில்லாக் குடும்பம் எனும் சான்றிதழ் வழங்குதல்

– போன்றவைகளை மக்கள் எளிதாகப் பெறுவதற்கு வழிவகுக்கும் சேவைத் திட்டத்தை காணொலி காட்சி வாயிலாக முதற்கட்டமாக கிருஷ்ணகிரி மாவட்டத்திலே இன்று தொடங்கி வைப்பதில் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன்.

இந்த வசதி அரியலூர், பெரம்பலூர், கோவை, திருவாரூர், நீலகிரி ஆகிய ஐந்து மாவட்டங்களுக்கும் விரைவில் நீட்டிக்கப்படும் என்பதையும், அதனைத் தொடர்ந்து தமிழகம் முழுவதும் இத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

“மக்களுக்குச் சிறப்பான வகையில் சேவை செய்ய ஒவ்வொரு சட்டமன்ற உறுப்பினருக்கும் பிரத்தியேகமான மின் அஞ்சல் முகவரி ஏற்படுத்தித் தரப்படும்” என 2010–2011ஆம் ஆண்டிற்கான, தகவல் தொழில் நுட்பவியல் துறையின்

**மானியக் கோரிக்கையின்போது, தமிழக அரசின் சார்பில் அறிவிக்கப்பட்டது. அந்த அறிவிப்பை நிறைவேற்றும் வகையில், தமிழகத்தின் 234 சட்டப் பேரவைத் தொகுதி உறுப்பினர்களுக்கும், தேசிய தகவல் மையத்தால்** (NIC) **தனி மின் அஞ்சல் முகவரிகள் (**e-mail-ID**) ஏற்படுத்தப்பட்டுள்ளன.**

**கிராம ஊராட்சிகளில் அழைப்பு மையங்கள்** (Call Centres) **அமைப்பதை ஊக்குவித்திட ஒரு சிறப்புக் கொள்கை உருவாக்கப்பட்டுள்ளது. இக்கொள்கையின் பயனாக, கிராமப்புற படித்த இளைஞர்களுக்கு வேலைவாய்ப்புகள் அளிக்கத்தக்க அழைப்பு மையங்கள் பல அமைக்கப்படும் அத்தகைய சூழல் உருவாகியுள்ளது. இத்தகைய மையங்களை அமைக்கக்கூடிய வணிக நிறுவனங்களும், கல்வி நிறுவனங்களும் தமக்கிடையே புரிந்துணர்வு ஒப்பந்தங்களை இன்று பரிமாறிக் கொள்கின்றன.**

**இதற்காக இங்கே வருகை தந்துள்ள நிறுவனங்களின் பிரதிநிதிகளை மகிழ்ச்சியோடு வரவேற்பதோடு, இந்நிகழ்ச்சியைச் சிறப்பான முறையில் ஏற்பாடு செய்துள்ள அதிகாரிகள், தொழில்நுட்பப் பணியாளர்கள் அனைவருக்கும் என் நன்றியையும், பாராட்டுகளையும் தெரிவித்து உரையை நிறைவு செய்கிறேன்.**

**நன்றி; வணக்கம்.**

• * *

**வெளியீடு:–இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**